மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நாம் அளிப்பது மட்டுமல்லாமல், மத்திய அரசும் மானியம் அளித்து வருகிறது. சமஸ்கிருத மொழியை வளர்ப்பதற்காக மத்திய அரசின் சார்பில் ஒரு வாரியம் அமைக்கப்பட்டு, அது நிதி உதவி வழங்கி வருகிறது. அவர்கள் அளிக்கும் நிதி தவிர, புத்தகங்கள், கருவிகள், தளவாடங்கள் வாங்குவதற்கும் மத்திய அரசு மானியம் வழங்குகிறது. அதையும் சேர்த்து, மாநில அரசும் தேவைப்படுகிற அளவுக்கு மானியம் வழங்குகிறது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, சமஸ்கிருதம் தவிர வேறு அன்னிய மொழி இருப்பதாகத் தெரியவில்லை என்று சொன்னார்கள். அரபு மொழிக் கல்லூரிகள் இருக்கின்றன. வேலூரில் பாக்கியாத்து சாலிஹா கல்லூரி, நீடூரில் அரபிக் கல்லூரி, லால்பேட்டையில் அரபிக் கல்லூரி இருக்கின்றது. அவற்றிற்கு மானியம் கேட்டால் கொடுக்க அரசு முன் வருமா? அது பற்றி பரிசிலிக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அது பற்றிய விவரம் இல்லை. அதற்கு இப்போது மானியம் வழக்கப்படுகிறதா இல்லையா என்று தெரியவில்லை. தனிக்கேள்வி போட்டால் அதன் முழு விவரம் அறிந்து சொல்லலாம்

திரு. செ. கந்தப்பன் : தலைவரவர்களே, உயர் தனிச் செம்மொழி என்ற அடிப்படையிலும், இந்தியக் கலாசாரத்தின் பெட்டகமாக விளங்குகிறது என்ற அடிப்படையிலும், சமஸ்கிருதத்திற்கு தனிச் சலுகை கொடுக்க மைய அரசாங்கம் முன்வந்திருக்கிறது.. அந்த அடிப்படையில் தமிழும் ஒப்புக் கொள்ளப்படுகிற காரணத்தால், தமிழுக்கும் அது போல் நிதி உதவி தர வேண்டுமென்று நமது அரசு மைய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது தனியாக கவனிக்கப் படவேண்டிய ஒன்று.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்விகள் மூலக் கேள்விக்குச் சம்பந்தமில்லாமல் இருக்கின்றன.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, சென்னை மைலாப்பூரில் உள்ள சமஸ்கிருதக் கல்லூரிக்கு எந்த அடிப்படையில் மானியம் கொடுக்கிறார்கள். அங்கே படிக்கும் பட்டதாரிகள் எப்படிப்பட்ட வேலைகளுக்கு அனுப்பப் படுகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

1973 பிப்ரவரி 13]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அவர்களுக்கு ஆண்டுக்கு எவ்வளவு செலவாகிறது என்ற கணக்கின் அடிப்படையில் பார்த்து அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் கணக்குப் பார்க்கிறபோது ரூ. 6681 லிருந்து ரூ. 8212 வரை செலவாகியிருக்கிறது. அதனால் தான் சுமார் ரூ. 6,681 லிருந்து ரூ. 8,212 வரை செலவாகியிருக்கிறது. அதனால் தான் சுமார் ரூ. 8,000 வரை கொடுக்கிறோம். அதிலே சிரோன்மணி படித்தவர்கள் களாகவும், அது சம்பந்தமான நிறுவனங்களில் பணியாற்றும் வாய்ப்புப் பெறுபவர்களாக இருக்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, அந்தக் கல்லூரியில் ஆண்டு ஒன்றுக்கு எத்தனை மாணவர்கள் படிக்கின்றார்கள்? அதில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்தான் இருக்கிறார்களா? வெளிநாட்டைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தக் கல்லூரியில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள்தான் பெரும்பாலும் படிக்கிறார்கள் என்று தெரியவருகிறது. முழுவிவரம் என்னிடத்தில் இல்லை. அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட சிரோன்மணி வகுப்பில் 20 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். அதைத் தவிர மத்திய அரசு சார்பாக வைக்கப்பட்டுள்ள வேத பாஷ்யா, ஜோதிஷ்கா வகுப்புகளிலும் மாணவர்கள் இருக்கிறார்கள். எவ்வளவு என்ற எண்ணிக்கைக் குறிப்பு என்னிடத்தில் இல்லை. தனிக்கேள்வி கேட்டால் முழு விவரம் கொடுக்கப்படும்.

குடிநீர் விசையேற்றங்களுக்கு மின் இணைப்பு

* 142 வினா—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 5—8—1971-ல் நடந்த வடார்க்காடு மாவட்ட வளர்ச்சிமன்றக் கூட்டத்தில், தற்போது ஊராட்சி மன்றங்களில் அமைக்கப்படும் குடிநீர் திட்ட பம்பு செட்டுகளுக்கு முன் பாதுகாப்புத் தொகை விலக்களித்து மின் இணைக்கும் தொகை, மின்சாரக் கட்டணச் சலுகை அளிக்கும்படி கோரி அரசை கேட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் அரசு எடுத்த முடிவென்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) மின் இணைக்கும் தொகை மேலும் முன் பாதுகாப்புத் தொகை இவைகளைக் கட்டுவதில் இருந்து ஊராட்சிகளுக்கு விலக்குத் தர இயலாது என்றும் வேளாண்மை விசையேற்றங்களுக்குச் சலுகை கட்டணம் விதிக்கப்

படுவதுபோல் குடிநீர் விசையேற்றங்களுக்கு சலுகை அளிக்க தக்க காரணம் ஏதும் இல்லை என்றும் மின்வாரியம் தெரிவித்துள்ளது. இந்த முடிவு மாவட்ட ஆட்சியாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, கிராமங்களில் வருவாய் சரியான நிலையில் இல்லாத காரணத்தாலும், மக்களுக்கு குடிநீர் அவசியமானது என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற காரணத்தாலும், அப்படிப்பட்ட வேலைகள் தாமதம் ஆகாமல் இருப்பதற்கும் அந்தச் சலுகை அளிப்பதற்கும் அரசு மேலும் ஆலோசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, வடாற்காடு மாவட்ட குழுவினர் போட்ட தீர்மானம் வாரியத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதன்படி வேளாண்மைத் துறையில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு அந்த மின் கட்டணச் சலுகை அளிக்கப்படுகிறது. ஊராட்சி மன்றங்களின் சார்பாக அமைக்கப்படும் விசையேற்றங்களுக்கு அது ஒரு அமைப்பாக இருக்கிறது, வேறு விதத்தில் மானியம் பெறுகிறது என்பதால், அதற்குச் சலுகை தருவது பொருந்தி வராது என்பதால், மின்வாரியம் அதற்குச் சலுகை அளிக்க முன் வரவில்லை.

விமானம் மூலம் பூச்சிக்கொல்லி மருந்து தெளித்தல்

* 154 வினா—**திரு. கே. எ. வகாப் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1970-71, 1971-72 ஆண்டுகளில் தமிழகமெங்கும், ஹெலிகாப்டர் மூலமும், சிறிய விமானம் மூலமும் எத்தனை ஏக்கருக்கு பூச்சி மருந்து தெளிக்கப்பட்டிருக்கிறது ?

(இ) விமான மூலம் தெளிக்கப்படுவதை எதிர்த்து விவசாயிகளிடமிருந்து அரசுக்கு கோரிக்கை ஏதும் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) 1970-71, 1971-72 ஆம் ஆண்டுகளில், விமானம் மூலம் பூச்சிக் கொல்லி மருந்து தெளிக்கும் திட்டத்தின் கீழ், ஹெலிகாப்டர் மூலமும் நிலையான இறக்கைகள் பொருந்திய விமானம் மூலமும் மருந்து தெளிக்கப்பட்டது.

1973 பிப்ரவரி 13]

பயிர்வகை.	1970–71.	1971–72.
	(ஏக்கர் லட்சத்தில்.)	
வேர்க்கடலை	1·025	4·410
நெல்	5·889	4·625
பருத்தி	0·057	0·768
உருளைக்கிழங்கு	0·003	0·768
மொத்தம் ..	6·974	9·803

(இ) ஆம். இவ்வேலைத் திட்டத்தை மேற்கொள்வதற்கு உழவர்களிடம் ஒப்புதல் தனித்தனியே பெறப்படவில்லையென்று சில உழவர்கள் முறையீடு செய்துள்ளனர்.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, பல லட்சக்கணக்கான ஏக்கர்களுக்கு அடித்து இருப்பதாகக் கணக்குச் சொல்கிறார்கள். அதனால் நாம் கணக்கெடுத்த நிகர பலன் கிடைத்து இருக்கிறதா என்பதை அரசாங்கம் ஆராய்ந்தது உண்டா? அதன் பலன் குறைவு தான் என்றும், விவசாயிகள் ஹெலிகாப்டர் மூலம் தெளிப்பது அதிகமான பலனைத் தரவில்லை என்றும் கூறுகிறார்கள் என்ற கருத்து பரவலாக இருக்கிறது. அந்தக் கருத்தை அரசாங்கம் பரிசீலிக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, இந்த விமானம் மூலம் மருந்து தெளிக்கும் திட்டம் 1961-62-ம் ஆண்டில் துவங்கப்பட்டு 1971-72-ம் ஆண்டு வரையில் நடைபெற்று வந்தது. 1961-62 லிருந்து விவசாயிகளுக்கு சரியான பலன் கிடைத்து இருக்கிறது என்ற காரணத்தால் தான் ஆண்டுதோறும் அது அதிகமாக்கப்பட்டு இறுதியில் சென்ற ஆண்டு 9803 ஏக்கருக்கு தெளிக்கப்பட்டது. விவசாயிகள் அதன் மூலம் பலன் பெற்று இருக்கிறார்களா என்று உணவு உற்பத்தியைக் கணக்குப் பார்த்தால், 1961-62 முதல் 1971-72 வரை பார்த்தால் பலன் கிடைத்து இருக்கிறது என்பது நன்கு தெரியும். பெரும்பாலான விவசாயிகள் நன்மை பெற்று இருக்கிறார்கள். ஒரு சிலர் எப்படி தெளிக்கப்படுகிறது என்பதை நாங்கள் பார்க்கவில்லை என்று சொல்லப்பட்ட காரணத்தாலும், தஞ்சை மாவட்டத்தில் இருக்கிற விவசாயப் பெருமக்கள் பல பேர் உயர் நீதி மன்றத்திற்குச் சென்று, நாங்கள் எல்லாம் எங்களுடைய நிலங்களை குத்தகைக்கு விட்டு இருக்கிறோம், குத்தகைதாரர்